தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 124/ந/2023
நாள் 08.07.2023

திரு. வ. கணேசன்,
தேவகோட்டை
சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
தேவகோட்டை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம். – எதிர் மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, கைலாசநாதபுரம், கதவு எண்.12–G என்ற முகவரியில் வசிக்கும் திரு. வ. கணேசன் என்பவரின் 04.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.05.2023 அன்று பெறப்பட்டு 124/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, கைலாசநாதபுரம், கதவு எண்.12 G என்ற முகவரியில் வசிக்கும் திரு. வ. கணேசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“நான் தேவகோட்டை வட்டம் மற்றும் நகரத்தில் 12 ஜி, கைலாசநாதபுரத்தில் வசித்து வருகிறேன். எனக்கு அருகில் 12A என்ற கதவிலக்கத்தில் வசித்து வரும் திரு. துரைசாமி என்பவர் தன்னுடைய வீட்டில் இருந்து வரும் கழிவுநீரை தனது வீட்டில் இருக்கும் கழிவுநீர் தொட்டியில் சேமித்து வருகிறார். கழிவுநீர் தொட்டி முழுவதும் நிரம்பி, அதில் இருந்து வரும் துர்நாற்றம் மற்றும் கொசுக்களினால் நாங்களும் மற்றும் அக்கம் பக்கத்தில் வசித்து வருவோரும் பெரும் சுகாதார மற்றும் உடல்ரீதியான பாதிப்புகளை அடைந்து வருகின்றோம் இது

தொடர்பாக, கழிவுநீரை அகற்ற துரைசாமி என்பவரிடம் முறையிட்டதற்கு, தன்னால் கழிவுநீரை அகற்ற முடியாது என தெரிவித்து விட்டார்.

எனவே, இதுகுறித்து இந்நகரத்தின் பொது சுகாதாரத்திற்கு பொறுப்பு மற்றும் பாதுகாப்பாளராக இருக்கும் தேவகோட்டை நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அளித்த மனு மீது இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மிகவும் அலட்சியமாகவும், நிர்வாக திறன் இன்றியும் செயல்படும் சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டியும் கழிவுநீர் தொட்டியில் உள்ள கழிவுநீரை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியும் தங்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தேவகோட்டை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

தேவகோட்டை நகராட்சி ஆணையாளர் தனது 07.06.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"தேவகோட்டை நகராட்சி கைலாசநாதபுரம் தெருவில் 12எ, கதவிலக்கத்தில் வசிக்கும் திரு.துரைசாமி என்பவர் வீட்டில் கழிவுநீர் தொட்டி முழுவதும் நிரம்பி அதிலிருந்து துர்நாற்றம் வருவதாக மனுதாரரின் 04.05.2023 நாளிட்ட மனுவில் புகாராக குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் தேவகோட்டை நகராட்சி கைலாசநாதபுரம் திரு.துரைசாமி என்பவர் வீட்டினை ஆய்வு செய்த போது தனியரின் வீட்டிலிருந்து சமையல் மற்றும் குளியல் அறை கழிவுநீரினை இரண்டு உறிஞ்சு குழிகள் அமைத்து விடப்படுகிறது. ஆய்வின் போது தண்ணீர் தேக்கமோ, துர்நாற்றமோ ஏதும் இல்லை என்றும் தனியரிடம் தண்ணீர் தேங்காத வண்ணம் பராமரிக்கவும் அவ்வப்போது கழிவுநீரை அப்புறப்படுத்த வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் தேவகோட்டை நகராட்சி ஆணையரும் 27.06.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.06.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. வ. கணேசன் என்பவர் 27.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

(5) 27.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையாளருக்கு பதிலாக தேவகோட்டை நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றும் திரு.ஆ.பாஸ்கரன் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்த திரு துரைசாமி என்பவரது வீட்டில் அமைக்கப்பட்டிருந்த கழிவுநீர் தொட்டியிருந்து துர்நாற்றம் வருவது குறித்து பெறப்பட்ட புகார் மனுவையொட்டி மேற்கண்ட வீட்டில் ஆய்வு செய்யப்பட்டு தனியரின் வீட்டில் தேங்கியிருந்த கழிவுநீர், இரண்டு உறிஞ்சு குழாய்கள் அமைத்து முறையாக வெளியேற்றப்பட்டுவிட்டது. தற்போது அங்கு கழிவுநீர் தேக்கமோ, துர் நாற்றமோ வருவதில்லை எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து, அதற்கான புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, தேவகோட்டை நகராட்சி ஆணையாளர் அறிக்கை மற்றும் நகராட்சி துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையைச் சேர்ந்த மனுதாரர் திரு.வ.கணேசன் என்பவர் தனது 04.05.2023 நாளிட்ட மனுவில் தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட தனது பக்கத்து குடியிருப்பில் (12A, கைலாசநாதபுரம், தேவகோட்டை) வசித்து வரும் திரு. துரைசாமி என்பரின் வீட்டிலிருந்து வெளியேறும் கழிவுநீர் வடிகாலுடன் இணைக்கப்படாததால், கழிவுநீர் தொட்டி நிரம்பி வெளியேறுவதால், அருகிலுள்ள அனைத்து குடியிருப்புதாரர்களுக்கும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது எனவும் இதுகுறித்து நகராட்சியில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் புகாராக தெரிவித்து நிரந்தரமாக கழிவுநீரை அகற்ற ஆவன செய்யுமாறு கோரியுள்ளார். முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவின் மீதான 27.06.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டும், தொலைபேசியில் தகவல் அளித்தும் மனுதாரர் விசாரணையில் கலந்துக் கொள்ளாதது மிகவும் கண்டிக்கத்தக்கது. இனிவருங்காலங்களில் இதுபோன்ற செயலை தவிர்த்திடுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் புகாராக தெரிவித்த உடன், புகாராக தெரிவித்துள்ள கழிவுநீர் தேங்கியுள்ள குடியிருப்பினை நகராட்சியினர் ஆய்வு செய்து கழிவு நீரினை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்போது எவ்வித சுகாதார சீர்கேடின்றி இருப்பதை நகராட்சி ஆணையர் சமர்ப்பித்த புகைப்படங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் திரு.வ.கணேசன் என்பவர் தனது பக்கத்து குடியிருப்பிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை வெளியேற்ற உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி 12.04.2022 அன்று புகார்

தெரிவித்தும் மற்றும் நினைவூட்டு மனுக்கள் அளித்தும் உள்ளார். கழிவுநீர் வெளியேற்றப்படாமல் இருந்தால் அதன் மூலம் நோய் தொற்று கிருமிகள் உருவாகி பொது மக்களின் பொது சுகாதார சீர்கேடுகளுக்கும், தொற்றும் நோய்களுக்கும் வழிவகுக்கும் என்பதை கருத்தில் கொள்ளாமல், **2022 ஆம் ஆண்டிலேயே புகார் மனு நகராட்சியில் வரப்பெற்றதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்த தேவகோட்டை நகராட்சி ஆணையரின் பொறுப்பற்ற செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.**

இனி வருங்காலங்களில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் / புகார் மனுக்கள் மீது எவ்வித காலதாமதமும் இல்லாமல், அரசுக்கும், நகராட்சி நிர்வாகத்திற்கும் எவ்வித அவப்பெயரும் ஏற்படாவண்ணம் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேவகோட்டை நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 08–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.வ.கணேசன்,
எண்.12 ஜி, கைலாசநாதபுரம் மேற்கு,
தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம்.

2) ஆணையாளர், தேவகோட்டை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/7/23
உதவிப்பதிவாளர்

18/07/23